1975 அக்டோபர் 27] [திரு. செ. மாதவன்]

சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதி யின்றி குடியிருப்போரகளை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதி யின்றி குடியிருப்போரகளை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதி யின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழி கிறேன்.

தமிழ்நாடு பொது வளாகங்கள் (அனுமதியற்ற அனுபோக தாரர்கள் வெளியேற்றுதல்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 27/1960) பொதுவளாகங்களிலிருந்து அனுமதியற்ற அனுபோக தாரர்கள் தற்போது வெளியேற்றப்படுகின்றூர்கள். இச்சட்டத்தின் கீழ் உள்ள அமைப்பின் வாயிலாக பொது வளாகங்களில் அனுமதியற்ற அனுபோகதாரர்களை மாநில அரசால் திறம்பட

* 24—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.